**செப்டம்பர் – 03**

# TNPSC துளிகள்

- இந்திய இராணுவத்தின் ஸ்பியர் கார்ப்ஸ் எனப்படும் கிழக்கு எல்லை பாதுகாப்புப் படை மற்றும் இந்தோ-திபெத்திய எல்லை காவல் படை (ITBP) ஆகியவை அருணாச்சலப் பிரதேசத்தின் மத்தியப் பகுதியில் அச்சுக் பிரஹார் எனும் பெரிய கூட்டுத் தாக்குதல் பயிற்சியை நடத்தின.
- குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்திலுள்ள வீர் சாவர்க்கர் விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில், ஆடவர்களுக்கான 79 கிலோ எடைப் பிரிவில் அஜய பாபு வல்லூரி தங்கப் பதக்கம் வென்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இரண்டாவது பிரத்யேக ‘யானைப் பாகன் கிராமம்’

- இரண்டாவது பிரத்தியேக ‘யானைப் பாகன் கிராமம்’ ஆனது ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் (ATR) உள்ள கோழிக்கமுத்தி யானை முகாமில் திறக்கப்படத் தயாராக உள்ளது.
- இதில் அங்குள்ள உள்ளூர் மலசர் பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த 47 யானைப் பாகன்களும், யானைகளும் தங்க வைக்கப்படுவர்.
- யானைப் பாகன்கள், யானைகளைக் கையாளுபவர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுக்காக பிரத்தியேகமாக கட்டமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் ஆகும்.
- இத்தகைய முதல் கிராமமானது, முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானை முகாமில் 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் திறக்கப்பட்டது.





## சிற்றாமைகள் குறித்த தொலை அளவியல் ஆய்வு

- தமிழ்நாடு மாநிலமானது 2025 முதல் 2027 ஆம் ஆண்டு வரையிலான இரண்டு ஆண்டு கால தொலை அளவியல் ஆய்வை அறிவித்துள்ளது.
- தமிழகத்தின் கடற்கரையோரத்தில், செயற்கைக்கோள் மற்றும் ஃபிளிப்பர் டேக்கிங்

எனும் குறியிடல் முறையைப் பயன்படுத்தி, ஆலிவ் ரெட்லே ஆமைகளின் இயக்கங்களைக் கண்காணிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கரையோரப் பகுதிகளில் அவை அதிகம் காணப்படும் இடங்கள், அவற்றின் இடம் பெயர்வுப் பாதைகள் மற்றும் அவை அதிக எண்ணிக்கையில் வலையில் சிக்கிக் கொள்ளும் வகையிலான மீன்பிடி மேற்கொள்ளப்படும் பகுதிகளை அடையாளம் காண்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மீன்பிடித்தல் தொடர்பான உயிரிழப்பைக் குறைப்பதற்கான அறிவியல் ஆதரவு உத்திகளை இந்த ஆய்வின் முடிவுகள் வழங்கும்.




# தேசியச் செய்திகள்

## 2 புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள்

- இந்தியத் தலைமை நீதிபதி B.R. கவாய், நீதிபதிகள் அலோக் ஆராதே மற்றும் விபுல் M. பஞ்சோலி ஆகியோருக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இந்த இரண்டு நீதிபதிகளின் பதவியேற்புடன், உச்ச நீதிமன்றம் அதன் முழு அனுமதிக்கப் பட்ட 34 என்ற நீதிபதிகள் எண்ணிக்கையை எட்டியது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதியன்று, தலைமை நீதிபதி கவாய் ஓய்வு பெறும் வரை இது தொடரும்.
- நீதிபதி பஞ்சோலி 2031 ஆம் ஆண்டு அக்டோபர் 03 முதல் 2033 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதியன்று ஓய்வு பெறும் வரையில், பணி மூப்பு அடிப்படையிலான விதிமுறையின் கீழ் இந்தியாவின் தலைமை நீதிபதியாக பதவியேற்க உள்ளார்.
- அவரது நியமனச் செயல்முறையானது நீதிபதி தேர்வுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான நீதிபதி B.V. நாகரத்னாவிடமிருந்து ஓர் அரிய கருத்து வேறுபாட்டைக் கண்டது.
- தற்போது உச்ச நீதிமன்றத்தில் உள்ள ஒரே பெண் நீதிபதி இவர்தான்.
- அகில இந்திய உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பணி மூப்பு பட்டியலில் நீதிபதி பஞ்சோலி 57வது இடத்தில் இருப்பதாகவும், அவரை விட மூத்த நீதிபதிகளில் பலரைப் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கலாம் என்றும் நீதிபதி B.V. நாகரத்னா குறிப்பிட்டார்.
- நீதிபதி நாகரத்னா தனது மறுப்பில், அவரது நியமனம் நீதி நிர்வாகத்திற்கு "எதிர்மறை

ஆனதாக" இருக்கும் என்றும், நீதிபதி தேர்வுக் குழுவின் நம்பகத் தன்மை ஆபத்தில் உள்ளது என்றும் எழுதினார்.

- இருப்பினும், நீதிபதிகள் தேர்வுக் குழுவானது, 4:1 என்ற பெரும்பான்மையில், ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று நீதிபதிகள் பஞ்சோலி மற்றும் ஆராதே ஆகியோரைப் பரிந்துரைத்தது.
- ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று வழங்கப்பட்ட நீதிபதிகள் தேர்வுக் குழுவின் தீர்மானத்துடன் தனது மறுப்புக் குறிப்பை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.
- இருப்பினும், அந்தக் குறிப்பு வெளியிடப்படவில்லை.




# சர்வதேசச் செய்திகள்

## கூட்டு கார்பன் மதிப்பு வழங்கீட்டுச் செயல்முறை (JCM)

- குறைவான கார்பன் உமிழ்வு கொண்ட தொழில்நுட்பங்களுக்கான ஒப்பந்தத்தில் இந்தியா ஜப்பானுடன் இணைந்து கையெழுத்திட்டுள்ளது.
- இது இந்தியாவில் பசுமை இல்ல வாயு குறைப்பு அல்லது நீக்கம் மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு பங்களிக்கும் திட்டங்களை செயல்படுத்துவதை எளிதாக்கும்.
- இது அதன் வகையான முதல் கூட்டு கார்பன் மதிப்பு வழங்கீட்டுச் செயல்முறையாகும் (JCM).
- JCM என்பது ஒரு ஜப்பானிய முன்னெடுப்பு ஆகும்.
- ஜப்பான் நாடானது வளர்ந்து வரும் நாடுகளில் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தி முதலீடு செய்கிறது.
- இதன் விளைவாக உருவாகும் உமிழ்வுச் சேமிப்புகள் ஜப்பானின் கணக்கில் கார்பன் மதிப்புகளாக வரவு வைக்கப்படுகின்றன.
- இந்தியாவை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அதன் தேசிய அளவிலான உமிழ்வு-குறைப்பு இலக்குகளை அடைய இதனைப் பயன்படுத்தலாம்.
- ஜப்பான் பல்வேறு செயல்படுத்தல் நிலைகளில் உள்ள 30 பிற நாடுகளுடன் JCM ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

- இது பாரிசு உடன்படிக்கையின் 6.2வது பிரிவின் கீழ் இதே போன்ற வழிகளில், இந்தியாவின் NDC (தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு) உறுதிமொழிகளை "அதிகளவில் பாதிக்காமல்", ஜப்பான் மற்றும் பிற நாடுகளுடனான அத்தகையத் திட்டங்களிலிருந்து உருவாக்கப்படும் கார்பன் மதிப்புகளின் சர்வதேச வர்த்தகத்தையும் இது செயல்படுத்தும்.
- இந்தியாவின் NDC ஆனது,
  - 2005 ஆம் ஆண்டு உமிழ்வு நிலைகளிலிருந்து 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வுச் செறிவினை 45% குறைத்தல்,
  - 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்களிலிருந்து 50% ஒட்டுமொத்த மின்சார உற்பத்தித் திறனை அடைதல், மற்றும்
  - 2030 ஆம் ஆண்டிற்குள் காடு வளர்ப்பு மூலம் 2.5-3 பில்லியன் டன் வரையிலான கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான கூடுதல் கார்பன் உறிஞ்சு பகுதியை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு உறுதி பூண்டுள்ளது.
- மேலும் இந்த வாரத் தொடக்கத்தில், சுற்றுச்சூழல் அமைச்சகமானது, 'தேசிய அளவில் நியமிக்கப்பட்ட ஆணையத்தினை (NDA) அமைத்தது.
- NDA என்பது அத்தகையத் திட்டங்களை அங்கீகரிப்பதற்கும், உமிழ்வுக் குறைப்புகளை மதிப்பிடுவதற்கும், இந்தியக் கார்பன் சந்தையின் செயல்பாட்டை மேற்பார்வையிடச் செய்வதற்குமான முதன்மை நிறுவனமாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான இழப்பீட்டு வரி

- செப்டம்பர் 03 மற்றும் 04 ஆகிய தேதிகளில் நடைபெற்று வரும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) சபைக் கூட்டத்தில், பாஜக ஆட்சி சாராத எட்டு மாநிலங்களின் குழு, முன்மொழியப் பட்ட 40% GST விகிதத்திற்கு மேலான பாவ (உடலுக்குத் தீங்கிழைக்கும் பொருட்கள்) மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கான வீத வரிகளை விதிக்க முன்மொழிந்துள்ளது.
- அத்தகைய வீத வரி இல்லாமல், மத்திய அரசின் முன்மொழியப்பட்ட விகித பிரிப்பினால் ஏற்படும் வருவாய் இழப்புகள், வளர்ச்சிக்கான அவற்றின் செலவினங்களில் குறைந்தது 15% வரை அதனைத் தடுக்கின்றன.
- 12% மற்றும் 28% வரி அடுக்குகளை நீக்கி, இந்த வரி அடுக்குகளில் உள்ள

பெரும்பாலான பொருட்களை முறையே 5% மற்றும் 18% அடுக்குகளுக்கு மாற்ற மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.

- ❖ சில பாவ மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு 40% விகித வரியையும் முன்மொழிந்து உள்ளது.
- ❖ அசாம், சத்தீஸ்கர், குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை கூடுதல் வரி இல்லாமல் GST விகிதத்தை ஒதுக்கும் திட்டத்தை ஆதரிக்கின்றன.
- ❖ மேற்கு வங்காளம், தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் கர்நாடகா ஆகியவை கூடுதல் வரி மூலம் வீத வரியைத் தொடர ஆதரவு தெரிவித்துள்ளன.

**New GST Rates 2025 – What Changes for You?**

| Old GST Structure | New GST Proposal (2025) |
|---|---|
| 4 Slabs: **5%, 12%, 18%, 28%** | 2 Slabs: **5% & 18%** |
| **Luxury/Sin Goods @ 28%** | **Ultra-Luxury & Sin Goods @ 40%** |
| **Confusing slab overlaps** | **Clear "Merit" (5%) & "Standard" (18%) split** |
| Refund delays, complex filings | **Pre-filled returns, faster refunds** |
| Frequent disputes on classification | **Stability & predictability promised** |
| Higher tax on daily-use items | **Lower tax burden on essentials** |
| Startups face tough compliance | **Simpler registration & compliance** |
| Multiple rate changes in 7 yrs | **Next-gen reforms with long-term rates** |


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## UDISE+ 2024–25 அறிக்கை

- ❖ கல்வி அமைச்சகமானது, ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வித் தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+) 2024-25 அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ 2022-23 மற்றும் 2023-24 ஆகிய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2024–25 ஆம் கல்வியாண்டில், ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி நிலைகளில் இடைநிற்றல் விகிதங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன.
- ❖ 2024-25 ஆம் ஆண்டில் 1 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 1.92 கோடி மாணாக்கர்களில், 80% (1.54 கோடி மாணவர்கள்) அதே பள்ளியிலோ அல்லது வேறு பள்ளியிலோ அல்லது அங்கன்வாடி மையத்திலோ பள்ளிக் கல்விக்கு முந்தைய அனுபவத்தைக் கொண்டிருந்தனர்.
- ❖ இது 2023-24 ஆம் ஆண்டில் 73% ஆக இருந்தது, தற்போது 1 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 1.87 கோடி மாணாக்கர்களில் சுமார் 1.37 கோடி பேர் பள்ளிக் கல்விக்கு முந்தைய அனுபவத்தைக் கொண்டிருந்தனர்.
- ❖ 2024–25 ஆம் கல்வியாண்டில், அடிப்படை, ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்நிலை என அனைத்து கல்வி நிலைகளிலும் மாணாக்கர் சேர்க்கை தக்கவைப்பில் நேர்மறையான போக்கு காணப்படுகிறது.
- ❖ முந்தைய ஆண்டை விட மாணாக்கர் சேர்க்கை தக்கவைப்பு விகிதங்கள் கணிசமாக மேம்பட்டுள்ளன, இது

- அடிப்படை கல்வி மட்டத்தில் 98.0 சதவீதத்திலிருந்து 98.9% ஆகவும்,
- ஆரம்ப நிலையில் 85.4 சதவீதத்திலிருந்து 92.4% ஆகவும்,
- இடை நிலையில் 78.0 சதவீதத்திலிருந்து 82.8% ஆகவும்,
- உயர் நிலையில் 45.6 சதவீதத்திலிருந்து 47.2% ஆகவும் அதிகரித்துள்ளது.

❖ 2024–25 ஆம் கல்வியாண்டில் இடைநிலை மற்றும் உயர்நிலை மட்டங்களில் மொத்த சேர்க்கை விகிதத்தில் (GER) குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.




❖ 2023–24 ஆம் ஆண்டில் 89.5% ஆக இருந்த இடைநிலை அளவிலான GER 90.3% ஆகவும், உயர் நிலை மட்டத்தில் 66.5 சதவீதத்திலிருந்து 68.5% ஆகவும் உயர்ந்துள்ளது.

❖ அடிப்படை நிலையிலிருந்து ஆரம்ப நிலை கல்வியிலான மாறுதல் விகிதம் 98.1% சதவீதத்திலிருந்து 98.6% ஆகவும், ஆரம்ப நிலை முதல் இடைநிலை கல்விக்கான மாறுதல் விகிதம் 88.8 சதவீதத்திலிருந்து 92.2% ஆகவும், இடைநிலையிலிருந்து உயர்நிலைக்கான மாறுதல் விகிதம் 83.3 சதவீதத்திலிருந்து 86.6% ஆகவும் மேம்பட்டுள்ளது.

❖ ஒற்றை ஆசிரியர் மட்டுமே கொண்ட பள்ளிகள் முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் 6% குறைந்துள்ளன.

❖ இதே போல், எந்தவொரு சேர்க்கை விகிதமும் கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை சுமார் 38% ஆகக் குறைந்துள்ளது.

❖ 2023–24 ஆம் ஆண்டில் 57.2% ஆக இருந்த கணினி அணுகல் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையானது இந்த ஆண்டு 64.7% ஆக உயர்ந்துள்ளது.

❖ முந்தைய ஆண்டில் 53.9% ஆக இருந்த இணைய இணைப்பு உள்ள பள்ளிகளின் சதவீதம் ஆனது 63.5% ஆக அதிகரித்துள்ளது.


❖ இன்று, 93.6% பள்ளிகளில் மின்சாரம் உள்ளது, 97.3% பள்ளிகளில் பெண்கள் கழிப்பறைகள் உள்ளன, மற்றும் 96.2% பள்ளிகளில் ஆண்கள் கழிப்பறைகள் உள்ளன - இது அனைத்து மாணாக்கர்களுக்குமான கண்ணியம் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்கிறது.

❖ தற்போது 95.9% பள்ளிகளில் கை கழுவும் வசதிகள் உள்ளன என்பதோடு மேலும் பாதுகாப்பான குடிநீர் அணுகல் 99.3% அளவினை எட்டியுள்ளது.

❖ தற்போது மொத்தக் கற்பித்தல் பணியாளர்களில்/ஆசிரியர்களில் பெண்கள் 54.2% பங்கினைக் கொண்டுள்ளதுடன், 2024–25 ஆம் கல்வியாண்டில் பெண் ஆசிரியர்களின் பிரதிநிதித்துவமும் அதிகரித்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா – பீகார்




- பீகார் மாநில முதல்வர் நிதீஷ் குமார் பெண்கள் அதிகாரமளிப்பிற்கான இந்த சிறப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், பீகாரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெண் தொழில் முனைவோரைத் தயார்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
- இதில் பீகார் பெண்களுக்கு 10,000 முதல் 2 லட்சம் ரூபாய் வரை தொகை வழங்கப்படும்.
- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து தொடங்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழான முதல் தவணை 10,000 ரூபாய் ஆனது நேரடியாக பெண்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.
- இது உதவித் தொகை வடிவில் வழங்கப்படும்.
- வேலை தொடங்கிய ஆறு மாதங்களுக்குப் பிறகு அவர்களின் பணி மதிப்பிடப்படும்.
- அவர்கள் ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறுவதில் வெற்றி பெற்றால், அத்தகைய பெண்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரை கூடுதலாக வழங்கப்படும்.

## நுவாகாய் விழா 2025 – ஒடிசா




- நுவாகாய் என்பது அந்தப் பயிர் பருவத்தின் புதிய அரிசியை வரவேற்க கொண்டாடச்

செய்வதற்காக, ஒடிசாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுவடைத் திருவிழா ஆகும்.

- சந்திர நாட்காட்டியால் தீர்மானிக்கப்படும், இந்த நாள் சந்திர மாதத்தின் பதினைந்தாம் நாளின் 'பஞ்சமி திதி'யில் (ஐந்தாவது நாள்) வருகிறது.
- 'நுவா' என்ற சொல் புதியது என்றும், 'காய்' என்றால் உணவு என்றும் பொருள்படுகிறது.
- குடும்பங்கள் ஒன்றுகூடி அந்த அறுவடை பருவத்தின் முதல் தானியமான நபன்னாவை தெய்வங்களுக்குப் பரிமாறி, பின்னர் பொது உணவில் பங்களிப்பர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## SCOPE எமினன்ஸ் விருதுகள் 2025




- பொதுத்துறை நிறுவனங்களின் (PSEs) உச்ச நிலை அமைப்பான பொது நிறுவனங்களின் நிலை/ வருடாந்திர மாநாடு (SCOPE), மதிப்புமிக்க SCOPE எமினன்ஸ் விருது விழாவினை நடத்தியது.
- இந்த விருதுகள் இந்தியாவின் மேம்பாட்டிற்கு என்று பொதுத்துறை நிறுவனங்களின் குறிப்பிடத் தக்க பங்களிப்பைக் கொண்டாடுகின்றன.
- மகாரத்னா CPSU நிறுவனமான இந்திய மின் பகிர்மானக் கழக நிறுவனம் (POWERGRID) ஆனது, மனித வளத்திற்கான SCOPE எமினன்ஸ் விருதைப் பெற்றுள்ளது.

# இதரச் செய்திகள்

## மங்களகரமான தருமப் பொம்மை

- இந்தியப் பிரதமருக்கு அவரது ஜப்பான் பயணத்தின் போது அதிர்ஷ்டத்தின் அடையாளமாகக் கருதப்படும் ஒரு பாரம்பரிய தருமப் பொம்மை பரிசாக வழங்கப் பட்டது.
- ஜப்பானியக் கலாச்சாரத்தில் தருமப் பொம்மை மங்களகரமானதாகவும், அதிர்ஷ்ட கூறுகள் கொண்டதாகவும் கருதப்படுகிறது.
- குன்மாவில் உள்ள தகாசாகி நகரம் பிரபலமான தருமப் பொம்மைகளின் பிறப்பிடம் ஆகும்.

- ஜப்பானில் தருமப் பாரம்பரியம் தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இந்தியத் துறவி போதிதர்மரின் மரபை அடிப்படையாகக் கொண்டது.
- அவர் ஜப்பானில் தரும டைஷி என்று அழைக்கப்பட்ட அவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கு பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.



## குரு தேக் பகதூரின் 350வது தியாக தினம்




- இவர், அவரது போதனைகள், துணிச்சல் மற்றும் தியாகத்திற்காக மதிக்கப்படுகின்ற 9வது சீக்கிய குரு ஆவார்.
- அவர் குரு ஹர்கோவிந்தின் (6வது சீக்கிய குரு) மகன் ஆவார்.
- அவர் ஆரம்பத்தில் தனது துறவற இயல்புக்காக தியாக் மால் என்று அழைக்கப்பட்டார்.
- அவர் குரு ஹர் கிருஷ்ணனுக்குப் பிறகு 1664 ஆம் ஆண்டில் 9வது சீக்கிய குருவாகப் பொறுப்பேற்றார்.
- அவர் குரு கிரந்த் சாஹிப்பிற்கு 116 பாடல்களைப் பங்களித்தார்.
- அவர், முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் உத்தரவின் பேரில் 1675 ஆம் ஆண்டில் டெல்லியில் தூக்கிலிடப்பட்டார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★